விகாரி ஹ்ரு மாசி மீ
பிப்ரவரி 2020 - மார்ச் 2020

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:


தேஸிக ஸந்தேஸம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com

போகி உத்ஸவம்





ஸங்க்ராந்தி, இராப்பத்து சாற்றுமுறை உத்ஸவம்

விகாரி ஹ்ரு மாசி மீ
பிப்ரவரி 2020 - மார்ச் 2020

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஸம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri. T. Mohan Babu, Sri P.S. Anand & Sri K. Akash
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:



ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

'ஸ்வச்ச பாரத்' – இதுதான் அனைத்து அரசியல்வாதிகளின் தற்போதைய ஒருமித்த ஒலி. இதைத் தமிழில் ''தூய பாரதம்' என்னலாம். இது குறிப்பதெல்லாம் புலன்களுக்குப் புலப்படும் 'புறத்தூய்மையை' - வேண்டியதுதான். ஆனால் இதற்கும் மேலாக தேவைப்படுவது ஒன்றுண்டு - 'அகத் தூய்மை', அதாவது நல்லெண்ணம். 'உள்ளம்-உரை-செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து இறையுள்ளில் ஒடுங்கு' என நம்மாழ்வார் வலியுறுத்துவது இதைத்தான். குறிப்பாக வைணவர்கள் விஷயத்தில் குலசேகரப்பெருமானிடம் இது இருந்தமையைக் கண்டு, ஸ்வாமி தேசிகன் அவரை 'துய்ய குலசேகரன்' என விளித்தார். இதற்கு, ''ஆரம்கெட பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரம்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்'' என்பதே காரணமாக இருக்கமுடியும்!

இத்தூய்மையை 'மாசில்' (மாசு + இல்) எனவும் குறிக்கலாம். இந்த ஆழ்வார் அவதரித்ததால் இம்மாதமே 'மாசி' என (கடைக்குறைத்தலாக) வழங்கப்படுகிறது போலும். இவ்விதம் வைணவர்களிடம் குறையே கணிசியாத தன்மையை தேசிக பக்தர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதே, இம்மாதம் உணர்த்தும் செய்தி.

இம்மாத 'தேசிக ஸந்தேச' ஸஞ்சிகை, விசேஷ ஒளிப்படங்களுடன் கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாக அமையும்.

- ✓ போகி உத்ஸவம், ஆண்டாள் திருக்கல்யாணம்
- ✓ ஸங்க்ராந்தி உத்ஸவம், இராப்பத்து சாற்றுமுறை
- ✓ பரிவேட்டை உத்ஸவம்
- ✓ ரதஸப்தமி உத்ஸவம்
- ✓ வனபோஜன உத்ஸவம்
- ✓ தை புஷ்யம் உத்ஸவம்
- ✓ தை வெள்ளிக்கிழமை தாயார் உத்ஸவம்

இவைகளுடன் விசேஷ வ்யாஸங்கள், வழக்கமான மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம், இவைகளும் இடம் பெறுகின்றன.

தொடர்ந்துவரும் ஆங்கிலக் கட்டுரைப் பகுதி, இதிலும் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துக்களை ஆவலுடன் வரவேற்கிறோம்,

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:



விகாரி வருட மாசி மாத பஞ்சாங்கம்						
ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயதாரர்
பிப்ரவரி / மார்ச்	மாசி					
13.02.20	1	பஞ்சமி	வியாழன்	ஹஸ்தம்	மாதப்பிறப்பு - காலை - பெருமாள் திருமஞ்சனம் - மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ இராமகிருஷ்ண கனபாடிகள் - ஸ்ரீ N.R.S. ஸ்ரீராமன்
14.02.20	2	ஷஷ்டி	வெள்ளி	சித்திரை	காலை - பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - தாயார் உள் புறப்பாடு	ஸ்ரீ V. சேஷாத்ரி
15.02.20	3	ஸப்தமி	சனி	ஸ்வாதி (12.53) - 11.07	லக்ஷ்மி நரசிம்ஹர் ஆஸ்தானம்	
16.02.20	4	அஷ்டமி	ஞாயிறு	விசாகம் (10.03) - 9.59 AM	நம்மாழ்வார்	
17.02.20	5	நவமி	திங்கள்	அநுஷம் (07.52) / 9.09 AM	நாதமுனிகள்	
18.02.20	6	தசமி	செவ்வாய்	கேட்டை (0642) - 8.42 AM	தொண்டரடிப் பொடிகள்	
19.02.20	7	ஏகாதசி	புதன்	மூலம்	பெருமாள் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ G. காகுஸ்தன்
20.02.20	8	த்வாதசி	வியாழன்	பூராடம்	ஸேனைநாதன்	
21.02.20	9	த்ரயோதசி	வெள்ளி	உத்தராடம்	காலை - பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - தாயார் உள் புறப்பாடு	
22.02.20	10	சதுர்தசி	சனி	ச்ரவணம்	காலை - பெருமாள், தேசிகன் திருமஞ்சனம் - மாலை - பெருமாள்,தேசிகன் திருவீதி புறப்பாடு பின்பு ஆஸ்தானம்,ஸேவாகாலம்.	ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாஸன்
23.02.20	11	அமாவாசை	ஞாயிறு	அவிட்டம்	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம்.மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ N.R.S. ஸ்ரீராமன்
24.02.20	12	ப்ரதமை	திங்கள்	சதயம்	காலை பேயாழ்வார் திருமஞ் சனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் அஸோஸியேஷன்
25.02.20	13	த்விதீயை	செவ்வாய்	பூரட்டாதி	திருமால்வடை	
26.02.20	14	த்ருதீயை	புதன்	உத்தரட்டாதி	திருமால்வடை	



27.02.20	15	சதுர்த்தி	வியாழன்	ரேவதி	திருமால்வடை	
28.02.20	16	பஞ்சமி	வெள்ளி	அச்வினி	காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு	M/s. T.V.S. மோட்டார் கம்பெனி
29.02.20	17	ஷஷ்டி	சனி	பரணி	திருமால்வடை	
01.03.20	18	ஷஷ்டி (04.40) – 7.52Am / ஸப்தமி	ஞாயிறு	கார்த்திகை	கலியன்	
02.03.20	19	ஸப்தமி	திங்கள்	ரோஹிணீ	திருமால்வடை	
03.03.20	20	அஷ்டமி 07.48 (9.46 AM)	செவ்வாய்	ரோஹிணீ (0.33) – 6.00 AM / ம்ருகசீர்ஷம்	திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம் – காலை – பெருமாள், திருக்கச்சி நம்பிகள் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், திருக்கச்சி நம்பிகள் திருவீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ உ.வே. அழிசூர் T. ஸ்ரீநிவாஸாச்சார்
04.03.20	21	நவமி – 07.20 (8.56 AM)	புதன்	ம்ருகசீர்ஷம் – 01.48 (6.43 AM) / திருவாதிரை	திருமால்வடை	
05.03.20	22	தசமி – 05.41 (8.16 AM)	வியாழன்	திருவாதிரை (1.50) – 6.44 AM / புனர்வஸு	குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம் – காலை – பெருமாள், குலசேகராழ்வார் திருமஞ் சனம் – மாலை – பெருமாள், குலசேகராழ்வார் திருவீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	திருமஞ்சனம்: ஸ்ரீ T.C. ரங்கராஜன் குடும்பத்தினர், C/O. ஸ்ரீ R. சுந்தர். புறப்பாடு – சாற்றுமுறை: ஸ்ரீநிதி மோஹன்
06.03.20	23	ஏகாதசி – 03.01 (7.12 AM) / த்வாதசி 56.16	வெள்ளி	புனர்வஸு – 00.52 / புஷ்யம் – 57.33 (6.09 AM)	காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு	ஸ்ரீமதி S. காயத்ரி
07.03.20	24	த்ரயோதசி	சனி	ஆயில்யம்	தவனோத்ஸவம் 1ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை – பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம்	ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன்
08.03.20	25	சதுர்தசி	ஞாயிறு	மகம்	தவனோத்ஸவம் 2ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை – பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம்	ஸ்ரீ V. நரசிம்மன் – ஸ்ரீ V. உப்பிலியப்பன்

09.03.20	26	பௌர்ணமி – 43.56 (11.34 PM)	திங்கள்	பூரம்	தவனோத்ஸவம் 3ஆம் நாள். காலை பெருமாள் சமுத்திர ஸ்நானத்திற்கு எழுந்தருளல். பின்பு பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை – பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம்	மாசி மகம்: ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸன். தவன உத்ஸவம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நரசிம்மன்
10.03.20	27	ப்ரதமை	செவ்வாய்	உத்திரம்	தாயார்உத்ஸவர் திருமஞ்சனம்.மாலை உள்புறப்பாடு.	
11.03.20	28	த்விதீயை	புதன்	ஹஸ்தம்	பெருமாள் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை வீதி புறப்பாடு.	S.S.P.V.D.K. ட்ரஸ்ட்
12.03.20	29	த்ருதீயை	வியாழன்	சித்திரை	மதுரகவிகள்	
13.03.20	30	சதுர்த்தி	வெள்ளி	ஸ்வாதி	பெருமாள், தாயார் – மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு	S.S.P.V.D.K. ட்ரஸ்ட்

ஸ்ரீ தேசிக மொழி

"தேவதிராஜனின் திருவடிகளில் சரணாகதி செய்து புஷ்பங்களைப் பறித்து என் நாதனான அவன் செவ்வடிகளில் சேர்த்து நல்ல நீரையும் தூப தீபங்களையும் வாசனை தரும் வெற்றிலையையும் ஸமர்பித்து, ப்ராஸாதம், கறி, சர்க்கரை லட்டு, சீடை ஆகியவற்றையும் ஸமர்பித்து, மறுபடி மந்த்ரங்களை ஜபம் செய்து அந்த வரதனை த்யானம் செய்யுங்கள்" என்று சதுர்முக ப்ரஹ்மா முனிவர்களுக்கு உபதேசம் செய்தருளினார்.

– மெய்விரதமான்யம்

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:



ஸ்ரீ :

ஸ்ரீ அலர்மேல் மங்கா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

நெ. 4, K.P. சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 2495 3799
E-mail : svdd.mylai@gmail.com ★ website : www.svdd.com

மானவ, மானவியர்களின் கல்வி மேன்மைக்காக
ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை
16-2-2020 - ஞாயிற்றுக்கிழமை

ஞானாநந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் |
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ||
ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதியோ வதேத் |
தஸ்ய நிஸ்ஸரதோ வாணீ ஜஹ்நு கன்யா ப்ரவாஹவத் ||

ம்ரிய: பதியான ஸர்வேஸ்வரன் சேதநர்களை உஜ்ஜீவிப்பதற்காக பல அவதாரங்களை செய்து வருகின்றான். அவற்றுள் ராம கிருஷ்ணாதி விபவ அவதாரங்களை இதிஹாஸ புராணங்களான ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் புகழ்கின்றன. இவ்வவதாரங்களுக்கு முன்னதாகவே வேதம், ஞானம், அறிவு அழியாமல் இருக்க அருள்புரிய தோன்றிய அவதாரம் **ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரம்.** அந்த **லக்ஷ்மீ ஹயக்ரீவன்** நான்கு வேத ஸ்வரூபமே. அப்படிப்பட்ட **ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன்** நம் மாட மாமயிலையில் ஆஸ்திகர்களை அநுக்ரஹிப்பதற்காகவும், ஞானம், அறிவு, வாக்கு, வித்யை இவையெல்லாம் அளித்து நம்மை அநுக்ரஹிப்பதற்காகவும் கோயில் கொண்டுள்ளான். ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுக்கு ஆஸ்தீகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளது விகாரி வருஷம் மாசி மாதம் 4ம் தேதி **(16-2-2020) ஞாயிற்றுக்கிழமை** காலை **6.00 மணிக்கு விசேஷ திருமஞ்ஜனமும்,** அதனை தொடர்ந்து காலை **8.30 மணிக்கு வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனையும்** அதிவிமர்சையாக நடைபெற உள்ளது. ஆஸ்திகர்கள் இந்த விசேஷமான உத்ஸவத்தில் அன்வயித்து ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுடையவும், ஸ்வாமி தேசிகனுடையவும் அருளினால் ஞான ஐஸ்வர்யாதி சௌபாக்யங்களைப் பெறவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

தர்மகர்த்தாக்கள் : **R. முகுந்தன், P. சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்**

நிகழ்ச்சி நிரல்


16-2-2020 - ஞாயிற்றுக்கிழமை

காலை 6.00 மணிக்கு **விசேஷ திருமஞ்சனம்**

காலை 8.30 மணிக்கு **வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை**

(காலை 8.30 மணி, மாலை 4.00 மணி அர்ச்சனை ஆரம்பம்)

ஸங்கல்ப அர்ச்சனை நன்கொடை ரூ. 200/-



Sri:

Sri Vedantha Desikar Devasthanam

4/11, K.P. Koil Sannathi Street, Mylapore, Chennai - 600 004.
Ph: 044-2495 3799 E-mail: svdd.mylai@gmail.com



Date : 31.1.2020

ஸ்ரீ:


மயிலாப்பூர் ஸ்ரீ வேதாந்த தேசிகர் சன்னதியில் 16-02-2020
ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவருக்கு மாணவர்களின் வருடாந்திர தேர்வையொட்டி
வித்யா அபிவிருத்தி சங்கல்ப அர்ச்சனை நடைபெறுகிறது.

****

ஸ்ரிய : பதியாய், ஸர்வபூதஹிதப்ரதனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸர்வேஸ்வரனாய், கலியுக தெய்வமாய் உள்ள ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹன், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன், ஸ்ரீ ராமர் முதலான வ்யூஹ, விபவாவதாரங்களுடன் தானே ஆசாரியானாகவும் அவதரித்த நம் தூப்புல் குலமணி மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் சன்னிதியில் எழுந்தருளியிருந்து பக்தாபீஷ்டங்களை ஸம்பூர்ணமாக பூர்த்தி செய்து வருகிறான். இத்திருக்கோயிலில் ஸ்ரீ தேசிகனுடன் ஹயக்ரீவர் சன்னிதி ஏற்பட்டு சற்றேறக்குறைய 400 வருடங்களாகிறது. மேலும் இந்த சன்னிதியில் பகோத்ஸவம், நித்யோத்சவம், மாசோத்சவம் ஸம்வத்ஸரோத்ஸவாதிகள் மிகவும் விமரிசையாக நடந்து வருகிறது. பவித்ரோத்சவம் உபயவேதாந்தங்களுடன் கூட நடைபெறுகிறது. திருமலையப்பன் எங்கு எழுந்தருளி இருந்தாலும், தன் பக்தர்களையும் அடியார்களையும், பரிபூர்ண கடாக்ஷத்துடன் அனுக்ரஹித்து அவர்களின் வேண்டுதலை நிறைவேற்றி வருகிறான். இந்த சன்னிதியில் திருமலை போல் பிரார்த்தனை செய்து பக்தர்கள் கல்யாண உத்சவம் முதலான உத்சவங்களை செய்து பலன் அடைந்து வருவது தெள்ளத்தெரிகிறது. சுற்றுக்கோயில்களில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி ந்ருசிம்ஹனுக்கு தினமும் மாலை கற்கண்டு பானகமும், சுவாதி, ப்ரதோஷம் செவ்வாய்கிழமை முதலிய திதி நக்ஷத்ரங்களில் ப்ரார்த்தனை அபிஷேகமும் நடைபெற்று பலர் பலன் அடைந்து வருகின்றனர்.

ஸ்ரீசக்கரத்தாழ்வார் சன்னிதியில் பல பக்தர்கள் கோரிக்கைகளை வைத்து ஒரு மண்டலம் - 48 நாட்கள் - வலம் வருகிறார்கள். ஸ்ரீ சக்கரத்தாழ்வாருக்கும் பிரார்த்தனை அபிஷேகங்களை செய்து பலன் பெற்று மனமகிழ்ச்சியுடன் குடும்பத்துடன் மேலும்மேலும் கோயிலுக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

பிரதி வருஷம் பள்ளி குழந்தைகள், கல்லூரி மாணவர்களின் மேன்மைக்காக ஸங்கல்பித்து ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவனுக்கு, விசேஷ



Sri:

Sri Vedantha Desikar Devasthanam

4/11, K.P. Koil Sannathi Street, Mylapore, Chennai - 600 004.
Ph: 044-2495 3799 E-mail: svdd.mylai@gmail.com



திருமஞ்சனமும், அர்ச்சனையும், குழந்தைகளுக்கு ஸ்தோத்திரபாட, திவ்யப்ரபந்த போட்டிகளும் தேவஸ்தானத்தின் மூலமாக நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பரிசுகளும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பலவருடங்களாக பேச்சுத்திறன் அற்ற குழந்தைக்கு இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவருக்கு தேன் நைவேத்தியம் செய்து அத்தேனை தொடர்ந்து சாப்பிட்டு வந்தவுடன் குழந்தை பேச ஆரம்பித்து விட்டான் என அக்குழந்தையின் பெற்றோர்கள் நமது திருக்கோயிலுக்கு நேரில் வந்து தெரிவித்து சென்றதோடல்லாமல் பலருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவனின் பெருமையை அவர்களுக்கு தெரிந்தவர்களுக்கும், மற்றும் அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கும் எல்லாம் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவனின் அருள்தான் என்று போற்றி உரைக்கின்றனர்.

இந்த ஸன்னிதிக்கு ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்கள் பல பிரகாரங்களிலும் ஸ்ரீமத் அழகியசிங்கர், ஸ்ரீமத் ஆண்டவன், ஸ்ரீ பரகாலமடம் சுவாமி முதலான யதிச்ரேஷ்டர்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமானை அனுபவித்து பலபடிகளாலும் கைங்கர்யம் செய்து வருகிறார்கள். மேலும் பல மஹநீயர்களும் எம்பெருமானை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வருடம் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16.2.2020 ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவருக்கு விசேஷ திருமஞ்சனமும், அன்று மாணவ, மாணவியர்களின் கல்வி மேன்மைக்காகவும், தேர்வில் நல்ல மதிப்பெண்கள் அடையவும் வித்யா அபிவிருத்தி சங்கல்ப அர்ச்சனையும் , நடைபெறுகிறது. பக்தர்களும், ஆஸ்திகப்பெருமக்களும் பெருமளவு கலந்து கொண்டு ஸ்ரீ ஸ்ரீ அலர்மேல்மங்க தாயார், ஸ்ரீநிவாசப்பெருமாள், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள், ஸ்ரீ பேயாழ்வார், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்வாமி தேசிகன் திருவருளுக்கு பாத்திரர்கள் ஆகும்படி வேண்டுகிறோம். **நன்கொடை - Rs.200.00.**

அணுகவேண்டிய முகவரி:

ஸ்ரீ.வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
4,கேசவ பெருமாள் சன்னதி தெரு
மயிலாப்பூர் சென்னை 600 004.
தொலைபேசி : 044 - 2495 3799
கைபேசி: 98410 47064 / 98412 49465

R. MUGUNTHAN
TRUSTEE

கண்ணுக்கினியன





போகி உத்ஸவம் - ஆண்டாள் திருக்கல்யாணம்











ஸ்ரீ:



போகி உத்ஸவம் - ஆண்டாள் திருக்கல்யாணம்





ஸங்க்ராந்தி புறப்பாடு





கண்ணுக்கினியன









இராப்பத்து சாற்றுமுறை - ஆழ்வார் திருவடி தொழுதல்








ஸ்ரீ:

இராப்பத்து சாற்றுமுறை










இயற்பா சேவாகாலம்





பரிவேட்டை உத்ஸவம்








ரதஸப்தமி உத்ஸவம்



ஸ்ரீ:

ரதஸப்தமி உத்ஸவம்






வனபோஜன உத்ஸவம்








வனபோஜன உத்ஸவம்





கண்ணுக்கினியன



வனபோஜன உத்ஸவம்

தை புஷ்யம் உத்ஸவம்







6. Sri Varadaraja Panchasath

Sri U.VE. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Varadaraja Panchasath is a hymn of 51 Slokas that Swami Desika composed on the Lord of Hasthi Giri (in Kancheepuram), inarguably perhaps, his most favourite deity.

Having been born at Thooppul, a part of Sri Kanchi, our Acharya naturally had great admiration for Varadaraja, which is overwhelmingly evident in this Sthothra. Elsewhere, while submitting himself at His feet, Sri Desika asserts that Kanchi is the foremost among the seven Mokshapuris (places of deliverance) – the others being Ayodhya, Mathura, Maya (Haridwar), Kasi, Avanthika (Ujjain) and Dwaraka. – அடைக்கலப் பத்து - 1

Going a step further, he declares that the likes of Kasi – the Holy Cities – are no match for Kanchi, the abode of the dark-hued Varada. "காசி முதலாகிய நன்னகரி எல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா" (அம்ருதாஸ்வாதினி 27).



The Lord Varadaraja temple is situated on a hillock which, according to the legend, was the altar on which Brahma performed Aswamedha Yaga (horse-sacrifice), desiring to have a direct vision of the Lord.

At the end of the ritual, there appeared a luminous gleam like a radiant Sun from the altar even as Lord Varadaraja presented Himself in all His splendour in a Punya Koti Vimanam which resembled a golden hillock. Thus Brahma got his wish fulfilled and the place came to be known as Sathya Vratha Kshethra. Ever since, Brahma himself is said to be performing the annual Uthsavam to the Lord during the Tamil month of Vaikasi and hence it is called Brahmothsavam. The whole episode has been documented ever so beautifully and vividly by our Acharya, in his Tamil Prabandham 'Meyviradha Maanmiyam' also known as 'Athigiri Maahaathmyam'.

It is interesting to note that Swami Desika, in Sloka No. 48 of Varadaraja Panchasath, narrates his experience of the nowhere-in-the-world kind of Brahmothsavam, like this. "Oh! My Lord! You ought to be seen, worshipped and enjoyed in the Vaisakha festival, everyday and with unwinking eyes; when You ride on the Horse, Garuda, Chariot, Palanquin, etc.; with Your indescribable charm and ever-increasing splendour."

The next verse is a defining one. Our Acharya, so much under the spell of Devadhiraja's ultimate charm which 'eludes mental grasp and verbal presentation', swears that not even the bliss of Sri Vaikunta interests him -- "வைகுண்ட வாஸே அபி ந மே அபிலாஷ:"

Varada: means 'boon granter'. "வரம் ததாதி இதி வரத:" is the relevant Sanskrit root. Therefore, it is appropriate that the author refers to the Lord as 'Kalpa Saakhee' in the opening Sloka and 'Kalpa Vruksha' in the concluding verse. A Kalpa tree is considered as a desire-yielder which will fulfill all of one's wishes.

"Why didn't Azhwars devote more number of Paasurams to such a prominent deity or why didn't they make a more direct reference to Varadaraja than what they actually did? Swami Desika presents a path-breaking solution to this largely incomprehensible issue. The counter put forth by our Acharya is "Even the doyens among sages of unfailing intellect found themselves unequal to the task when they attempted to comprehend Your greatness. They were simply stunned by Your splendour and lay there dazed." He adds that "when such is the case, my temerity in composing a hymn on You deserves to be forgiven." – Sloka No. 2.

The depth of the author's humility soars in the next verse, as he submits that the sheer weight of his sins ties his tongue down. "But, the Lord's parental affection lifts the restraint and makes me vociferous (compose the hymn)."

Ekantha Sevai is a privileged vision of the Lord, enjoyed by those who render proximate service to Him, and a speciality of Varada. Swami Desika says that the blessed ones worship the Divine form during the Sevai in which the garlands, armour and ornaments are all removed, and he likens the Thirumeni to an emerald mountain. The anointment of Kasturi (musk) only accentuates the tinge of darkness and adds to the beauty, he supplements. – Sloka No. 46.

The author asserts in the Phala Sruti, that to whoever learns this hymn will the fruits of the 'Kalpa tree' – read as The Lord residing at the peak of Hasthi Giri – be so easily accessible; and that he can pluck them with his hands, at will. Truly a Phala Sruti, more than in one sense!

To be continued...

ஸ்ரீ:

ராகவனே! தாலேலோ!

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

குலசேகர ஆழ்வாரின் பெருமை


தமிழ்மொழியில்பக்திஇலக்கியங்களில்மிகவும்ஆழ்ந்த பொருள்களை உள்ளடக்கியவை ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்கள். அவ்வாழ்வார்களில், திருமகள் கேள்வன் தன் திருமார்பில் அநவரதம் அணிந்து அழகு பார்க்கும் 'கௌஸ்துபம்' எனும் மணியின் அவதாரமாய் இப்பூவுலகில் திருவஞ்சிக்களம் எனும் சேரநாட்டுத் தலத்தில் அரச வம்சத்தில் மாசி-புநர்வஸு நன்னாளில் அவதரித்தவர் குலசேகர ஆழ்வார்.

இவ்வாழ்வார் 'பெருமாள்' என்று ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் ப்ரஸித்தமான ஸ்ரீராமனின் பால் அதீத பக்திகொண்டவர். ஆகையினாலேயே இவர் அருளிச்செயதப்ரபந்தத்திற்கும்'பெருமாள்திருமொழி' என்று பெரியோர் பெயர் வைத்து மகிழ்ந்தனர். இந்த ப்ரபந்தம் முதலாயிரத்தில் நான்காவதாக அநுஸந்திக்கப்படுகிறது. இது பத்து திருமொழிகளாகப் பிரிக்கப்பட்டு எம்பெருமானின் ஸ்வரூப ரூப குணங்களில் ஆழ்வாரின் ஈடுபாட்டையும் அர்ச்சா மூர்த்திகளின்பால் ஆழ்வாருக்கு உண்டான பக்தியையும் பரக்க உரைக்கிறது.

இதில் முதல் மூன்று பதிகங்களில் அடியவர்கட் கெளியனான அரங்கனின் மங்களாசாஸனமும், நான்காம் பதிகத்தில் திருமலையப்பனின் அநுபவமும், ஐந்தாம் தசகத்தில் பகவாவனைத்தவிர வேறு களைகண் இல்லை என்று திருவித்துவக்கோடு எனும் சேரநாட்டுத் திவ்யதேச அநுபவமும், கண்ணனின் பால் கோபிகைகளுக்குண்டான ஊடலை ஆறாம் திருமொழியிலும், யசோதை பகவானை அநுபவித்தது போலே தானும் அநுபவிக்க முடியாமல் தவிக்கும் தேவகியின் புலம்பல் ஏழாம் திருமொழியிலும், எட்டாம் பதிகத்தில் ஸ்ரீராமனின் தாலாட்டும், ஒன்பதாவது திருமொழியில் பகவானை கானகத்துக் கனுப்பிய தயரதனின் புலம்பலும், கடைசி பதிகத்தில் எல்லையில்சீர் தயரதன்தன் மகனாய் தோன்றிய ஸ்ரீராமனின் திருஅவதாரம் முதல் அவன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும் வரை உண்டான சரிதையை தில்லை திருசித்ரகூட எம்பெருமான் விஷயமாக மங்களாசாஸனமும் செய்து தம்முடைய ப்ரபந்தத்தை தலைக்கட்டுகிறார்.

ஸ்ரீராமனின்பால் ஆழ்வாரின் ஈடுபாடு

ஆழ்வார் ஸ்ரீமத்ராமாயண கதையை எப்பொழுதும் கேட்டருள்வாராம். அவ்வாறு செய்யும்பொழுது சிற்சிலசமயங்களில் தம்மையே மறந்துவிடுவராம்.



அப்படி ஒரு ஸமயத்தில் ஸீதாபிராட்டியை கொடிய ராவணன் அபஹரித்த விருத்தாந்தத்தை கேட்டு, மனம் கலங்கி, பிராட்டியை மீட்டுவருவேன் என்று தம்முடைய சேனையை அழைத்துக்கொண்டு ஸமுத்ரத்தில் இறங்கினார் என்றும் இவருடைய பக்திக்கு மெச்சி பகவானும் பிராட்டியும் ஸேவை ஸாதித்து இவரை மீட்டருளினான் என்றும் ஆழ்வாருடைய சரித்திரத்திலிருந்து தெரியவருகிறது.

சக்ரவர்த்தித் திருமகன்பால் ஆழ்வாரின் பக்தியின் பெருக்காக வெளிப்பட்ட ப்ரபந்தங்களில் ஸ்ரீராமபிரான் குழந்தையாய் எழுந்தருளியிருக்கும் காலத்தில் அவனை தொட்டிலில் இட்டு, கௌஸல்யா பிராட்டி பெற்ற பேற்றை கூறும்விதமாக திருக்கண்ணபுரத்தெம்பெருமான் விஷயமாகப் பத்து பாசுரங்களினால் குலசேகரன் சொன்ன பதிகத்தை சிறிது அனுபவிப்போம்.

ஸ்ரீராகவனின் அவதாரமும் அதன் ப்ரயோஜனமும்

நிலைக்கின்ற புகழுடைய கௌஸல்யா பிராட்டியின் திருவயிற்றில் அவதரித்து ஸாதுசனத்தை நலியும்



கொடிய ராவணனை அவனுடைய நகரத்திலேயே அழித்து தர்மத்தை நிலைநாட்டி நல்ல விலக்ஷணமான மதிள்கள் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தில் ஸேவை ஸாதிக்கும் நீலரத்தினம் போலவும், எனக்கு போக்யமான அம்ருதம் போலவும் விளங்கும் ராகவனே! உனக்கு தாலாட்டு! என்கிறார் முதல் பாசுரத்தில்.

வளர்பிள்ளையை எட்டாம் மாதத்திலே தொட்டிலிலிட்டு பல கதைகளைக்கூறிக் கண்வளரப் பண்ணுகை தாலாட்டு எனப்படும். திவ்ய கவிகளான ஆழ்வார்கள் எம்பெருமானிடம் உள்ள பக்தியின் வெளிப்பாடாக அவனைச் சிறு குழுந்தையாகத் தொட்டிலிலே வளர்த்தி அவன் புகழையையே கூறி அவனை கண்வளரச் செய்வர்.

புவனியின் காரணம் இராமபிரான்

இரண்டாவது பாசுரத்தில், ஸ்ரீராமனே இந்த புவனி உண்டாவதற்காக நீயே தாமரை மலரில் பிரமனைத் தோற்றுவித்து அவனைக்கொண்டு படைத்தாய். மிகவும் பலசாலியான தாடகை எனும் அரக்கியை வில்லை வளைத்துக் கொன்றாய். கண்ணைக்கவரும் அழகையுடையவனான சௌரிப்பெருமாளே! எட்டுத் திசையும் ஆள்கின்ற ரகுகுல திலகமே! கண்வளர்வாய்! என்று ஆழ்வார் மங்களாசானம் செய்தருளிகிறார்.

சிறப்புமிக்க தீர்த்தங்களையுடைய திருக்கண்ணபுரம்

கறுத்த கூந்தலையுடைய கௌசலையின் தவப் புதல்வனே! பொருந்திய மஹா கீர்த்தியையுடைய ஜனக மஹாராஜரின் மருமகனே! சக்ரவர்த்தித் திரு மகனே! கங்கையிற் புனிதமான காவிரி உள்ளடக்கிய திருக்கண்ணபுரத்தின் கருமணியே! குலசேகரன் ஆகிய அடியேன் போன்று எண்ணற்ற ராஜாக்களின் குலத்துக்கே அரசனே! நீ துயில்வாய்! என்று மூன்றாம் பாட்டில் அருளுகிறார்

பரத, லக்ஷ்மணர்களுக்குக் கைங்கர்யம் கொடுத்தருளியவனே!

தாமரை இலையில் பிரமனைப் படைத்த ஸர்வலோக அதிபதியே! நீயே தயரதனின் மகனாக தோன்றினாயே! இதென்ன அதிசயம்! மஹாலக்ஷ்மியின் வல்லபனான வனே! இயற்கை சூழல் பரந்துள்ள திருக்கண்ண புரத்தானே! சார்ங்கமென்னும் வில்லாண்டவனே! கண்ணுறங்காய் என்று நான்காம் பாட்டிலும்,

அயோத்திநகர் ஆள்வதற்கு பரதாழ்வானுக்குப் பாதுகையளித்தவனே! லக்ஷ்மணனுக்கு கைங்கர்யஸ்ரீ அநுக்ரஹிக்க அவனுடன் காட்டுக்குச் சென்றவனே! திருமார்பு லக்ஷ்மியுடன் நித்யவாஸம் செய்யும் திருக்கண்ணபுரத்து நீலமேகனே! மாலைகளை நீண்டமுடிகளில் சூட்டி ஸேவை ஸாதிக்கின்றவனே! கண்வளர்வாய்! என்று ஐந்தாம் பாட்டிலும் அருளிச் செய்கிறார்.

பக்தர்களுக்கு அருமருந்தே! திருவாலி மணவாளனே!

மாற்றுத்தாயான கைகேயி சொல்ல, தம்முடைய சுற்றமெல்லாம் பின் தொடர்ந்து வர, தண்டகாரண்யம் எனும் வனத்தை அடைந்தவனே! தன்னையடைந்த பக்தர்களுக்கு அருமருந்தைப் போன்றவனே! கற்றவர்கள் பலரும் வாழும் திருக்கண்ணபுரத்து ஸ்ரீராமனே! கண்ணுறங்காய்! என்கிறார் ஆறாம் பாட்டில்.

ஏழாம்பாட்டில் ஆலிலையில் பள்ளிகொண்டு ப்ரபஞ்சங்கள் அனைத்தையும் உண்டவனே! வானரங்களின் அரசனான வாலியைக் கொன்று அவன் தம்பியான ஸுக்ரீவனுக்கு ஆட்சியைக் கொடுத்தவனே! திருக்கண்ணபுரத்திலும், திருவாலி திருநகரியிலும் அயோத்தியிலும் ஸேவை ஸாதிப்பவனே! தூயிலுறாய் என்று பேசுகிறார்.

மலைகளைக் கொண்டு சேதுபந்தனம் செய்து இலங்கையை அழித்தவனே! கடலைக் கடைந்து விண்ணவர்கட்கு அமுதருளிச் செய்தவனே! ஸகல சாஸ்த்ர வல்லுனர்கள் வாழும் திருக்கணபுரத்து எம்பெருமானே! கோதண்டபாணியே! ஸ்ரீராமனே! தாலேலோ! என்று போற்றிப்புகழ்கிறார் எட்டாம் பாட்டில்.

தயரதன் குலக்கொழுந்தே!

கட்டு அவிழும்படியான மயிர்முடியுடையவனான தயரதனின் திருக்குமாரனாக அவதரித்தவனே! பெரிய மதிள்களை உடைய இலங்கையை ஒப்பற்ற வில்லினால் அழித்தவனே! இயற்கை எழிலுடைய திருகண்ணபுரத்தில் கோயில் கொண்ட சௌரிராஜனே! இளையவர்களான ஸுக்ரீவனுக்கும் விபீஷணனுக்கும் அருளிய ராகவனே! கண்வளர்வாய்! என்கிறார் ஒன்பதாம் பாசுரத்தில்.

ஸகல சேதன அசேதன வஸ்துக்களையும் படைத்தவனே! அனைவரும் வந்து அடிவணங்குவதற் காகவே அரங்கநகர் துயில்பவனே! சிறந்த நதி என்று போற்றப்படும் காவிரி ஓடும் திருக்கண்ணபுரத்தானே! சார்ங்கபாணியே! தாலேலோ! என்கிறார் பத்தாம் பாட்டில்.

தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை

என் ஸ்வாமியான ராகவனின் விஷயமாகத் தாலாட்டி உரைத்த, வேலாயுதத்தையுடைய குலசேகரனாகிய தான் சொன்ன தமிழ்ப் பாசுரங்களைப் பாடுபவர்கள், தாம் பெற்ற பகவதநுபவத்தை அவர்களும் பெறு வார்கள் என்று பதிகப் பயனைக் கூறி அமைகிறார் குலசேகரர்.

ஆழ்வாரின் திருநக்ஷத்ரம் வரும் 05.03.2020 அன்று நம் ஸந்நிதியில் கொண்டாடப் பெறுகின்றது.

ஸ்ரீ:



ஸ்ரீவைஷ்ணவ தினசரி

[ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் புரிசை நடாதூர் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி (வைகுண்டவாஸீ) எழுதிய 'தர்ம ஸாரம்' என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது]

1. தூங்கி எழுந்திருக்கும் போது ''ஹரி'' என்று சொல்லிக் கொண்டே மெள்ள எழுந்திருக்க வேண்டும்.
2. ''ஹரி:'' என்று ஏழு தடவை உரக்கச் சொல்லி,

   ''க்ரஹக்ரஸ்தே கஜேந்த்ரே ருவதி
   ஸரபஸம் தார்க்ஷ்யம் ஆருஹ்யதாவந்
   வ்யாகூர்ணந் மால்யபூஷாவஸந
   பரிகரோ மேககம்பீர கோஷ: |

   ஆயிப்ராணோ ரதாங்கம் சரம் அஸிம்
   அபயம் சங்கசாபௌ ஸகேடௌ
   ஹஸ்தை: கௌமோதகீம் அப்யவது
   ஹரிரஸாவம்ஹஸாம் ஸம்ஹதேர் ந: ||''

   என்னும் ச்லோகத்தையும் சொல்ல வேண்டும்.
3. கண் விழிக்கும் போது பெருமாள் படங்களைப் பார்த்து ஸேவிக்க வேண்டும்.
4. அல்லது தனது உள்ளங்கையையாவது பார்க்க வேண்டும்.
5. படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது இடது காலை முதலில் பூமியில் வைக்க வேண்டும்.
6. அப்போது, பூமிதேவியை, 'நான் காலால் உன்னை மிதிப்பதை க்ஷமித்தருள வேண்டும்' என்று ப்ரார்த்திக்க வேண்டும்.
7. வீட்டை விட்டு வெளியில் செல்லும்போதெல்லாம் 'கேசவாய நம:' என்று சொல்லிக் கேசவனை த்யானம் பண்ணவேண்டும்.
8. ஜல மலங்களைக் கழிக்கச் செல்லும் போது பூணூலை வலது காதில் சுற்றிக்கொள்ள வேண்டும்.
9. தலையில் துணியைக் கட்டிக்கொள்ள வேண்டும்.
10. மலம் கழிக்கும் போது மூக்கையும், வாயையும் சேர்த்துத் துணியைக் கட்டிக்கொள்ள வேண்டும்.
11. அப்போது துர்நாற்றத்தை முகரக் கூடாது; பேசக் கூடாது; எச்சிலைத் துப்பிக்கொண்டே இருக்கக் கூடாது.
12. ஜல மலங்களைக் கழிப்பதை ஸூர்யனை நோக்கியவாறு செய்யக்கூடாது.
13. ஜலத்தை கழித்தால் முறைப்படி சுத்தி செய்து கொண்ட பிறகு, கைகளை அலம்பிக் கொண்டு, ஆறு தடவை வாயை ஜலத்தால் கொப்பளித்து, கால்களை நன்றாக அலம்பிக் கொண்டு, பூணூலை உபவீதமாகப் போட்டுக்கொண்டு இரண்டு தடவை ஆசமநம் பண்ண வேண்டும்.
14. மலத்தைக் கழித்தால் முறைப்படி சுத்தி செய்துகொண்ட பிறகு, கைகளை நன்றாக அலம்பிக் கொண்டு பன்னிரண்டு தடவைகள் வாயை ஜலத்தால் கொப்பளிக்க வேண்டும். பிறகு கால்களை நன்றாக அலம்பிக்கொண்டு, பூணூலை உபவீதமாகப் போட்டுக்கொண்டு மூன்று தடவை ஆசமநம் பண்ண வேண்டும்.
15. பல் துலக்குவதற்கு முன்னும் பின்பும் இரண்டு தடவைகள் ஆசமநம் பண்ண வேண்டும்.
16. பல் துலக்கும்போது, ஆயுஸ், பலம், யசஸ், ப்ரஜைகள், பசுக்கள், தனம், ப்ரம்ஹஜ்ஞாநம், நல்ல மேதை இவைகளை வநஸ்பதி தேவதையே! நீ கொடுக்க வேண்டும்! என்று வேண்டிக் கொள்ளும் மந்த்ரத்தைச் சொல்லி இடது பக்கம் கீழ் பாகத்திலிருந்து ப்ரதக்ஷிணமாகப் பல்லைத் தேய்க்க வேண்டும்.
17. பல் துலக்கும் போது வாயில் ஜலத்தை வைத்துக் கொண்டு ஆள்காட்டி விரலால் குழப்பக் கூடாது.
18. திதி, வார, நக்ஷத்ரங்களைச் சொல்லி ஸங்கல்பம் பண்ணிகொண்டே ஸ்நாநம் பண்ண வேண்டும்.
19. குளங்கள், ஏரி, வீடுகளில் ஸூர்யனை நோக்கியே ஸ்நாநம் பண்ண வேண்டும்.
20. நதிகளில் ப்ரவாஹத்தை நோக்கியவாறு ஸ்நாநம் பண்ண வேண்டும்.
21. எங்கும் வஸ்த்ரமில்லமல் ஸ்நாநம் பண்ணக் கூடாது.
22. நதி, குளம், ஏரி முதலியவைகளில் ஜலத்தில் எச்சில், கோழை முதலியவைகளைத் துப்பக் கூடாது.
23. நடு வீதியிலும் எச்சில் துப்பக் கூடாது.
24. சுத்தமான வஸ்த்ரத்தை ப்ரோக்ஷித்து, கையில் எடுத்து உதறி, ஸூர்யனுக்குக் காண்பித்து, வஸ்த்ரம், பசு, அன்னம், பானம், ஐச்வர்யம் இவைகளைக் கொடு என்று ப்ரார்த்திக்கும் மந்த்ரத்தைச் சொல்லி வஸ்த்ரத்தை உடுத்திக் கொள்ள வேண்டும்.
25. தலையில் உத்தரீயத்தைக் கட்டிக்கொண்டு, வலது காதில் பூணூலைச் சுற்றிக் கொண்டு, வஸ்த்ரத்தை உடுத்திக் கொள்ள வேண்டும்.



26. விவாஹமானவர்கள் கச்சம் வைத்த வேஷ்டியை உடுத்திக் கொள்ள வேண்டும்.

27. அகச்சனாக (கச்சமில்லாமல்) — தட்டாடையுடன் — இருக்கக் கூடாது.

28. வேஷ்டியை உடுத்தும் போது முன் கச்சத்தையும் பின் கச்சத்தையும் எப்போதும் மாற்றி உடுத்திக் கொள்ளக் கூடாது.

29. முதலில் முன் கச்சத்தை உடுத்திய பிறகே பின் கச்சத்தை உடுத்திக் கொள்ள வேண்டும்.

30. பின் கச்சத்தை உடுத்திக்க் கொள்ளும் போது காலைத் தூக்கிவைத்து உடுத்தக் கூடாது.

31. வேஷ்டியை உடுத்திக் கொண்ட பிறகு கை கால்களை நன்றாக அலம்பிக் கொள்ள வேண்டும்.

32. பிறகு பூணூலை சரியாகப் போட்டுக் கொண்டு ஆசமநம் பண்ணி மந்த்ர ஸ்நாநம் பண்ண வேண்டும்.

33. பிறகு திருமண் இட்டுக்கொள்ள வேண்டும். (திருமணை எடுப்பதற்கு, குழைப்பதற்கு, ஜபம் சேர்ப்பதற்கு, ஒன்றாகச் சேர்த்துக் குழைப்பதற்கு எல்லாவற்றிற்கும் மந்த்ரங்கள் உண்டு; அதில் 'ஹே! மண்ணே! என் பாபத்தைப் போக்கவும்! அதனால் நான் நூறு வயது வாழக் கடவேன்!' என்று ப்ரார்த்திக்கிறோம்).

34. திருமண், ஸ்ரீசூர்ணத்தை உட்கார்ந்து கொண்டே இட்டுக் கொள்ள வேண்டும். திருமணை இட்டுக்கொள்ளும் போது முதலில் பாதத்தை இட்டுக்கொண்ட பிறகே வலது பக்கத்துத் திருமணையும் அதன் பிறகு இடது பக்கத்துத் திருமணையும் மேல் நோக்கி இட்டுக் கொள்ள வேண்டும். பக்த ஜனங்களை ஊர்த்வ லோகத் திற்கு — ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்வதை ஸூசிப்பதால் இதற்கு ஊர்த்வ புண்ட்ரம் என்று பெயர் வந்தது.

35. திருமண் பெருமாள், ஸ்ரீசூர்ணம் பிராட்டி. அவர்கள் நம் உடம்பில் இருந்து நம்மைக் காப்பாற்றுகிறார்கள். ஆகையால் இதற்குத் திருமண் காப்பு என்று சொல்கிறோம்.

36. பன்னிரண்டு திருமண் இட்டுக் கொள்ளாதவர்கள் நெற்றியில் ஒரு திருமணை மட்டும் இட்டுக் கொண்டால் போதும்.

37. திருமண் இட்டுக் கொண்ட பிறகு மீதியிருந்தால் ஜலத்தால் அலம்பக் கூடாது.

38. ஸ்ரீசூர்ணத்தைத் திருமணுக்கு ஸமமான அளவாகவே இட்டுக்கொள்ள வேண்டும். கொஞ்சம் உயர்த்தியோ தாழ்த்தியோ இட்டுக் கொள்ளக் கூடாது.

39. ஸ்ரீசூர்ணம் இட்டுக்கொண்ட பிறகு ஸ்ரீசூர்ணத்தை ஒரு போதும் ஜலத்தைக் கொட்டி அலம்பக் கூடாது. இரண்டு கைகளால் தேய்த்துக் கொள்ள வேண்டும். பிறகே கைகளை அலம்ப வேண்டும்.

40. திருமண்களில் கேசவாதி மந்த்ரங்களையும், ஸ்ரீசூர்ணங்களில் ச்ரியை நம: என்னும் மந்த்ரங்களையும் ஜபிக்க வேண்டும்.

41. திருமண் இட்டுக் கொண்ட பிறகு ஆசார்யர்களை த்யாநம் பண்ண வேண்டும். ஆசார்யன் திருவடி ஜோடு இருந்தால் அதை சிரஸில் வைத்துக் கொண்டு தனியனை அநுஸந்திக்க வேண்டும். பிறகு அதை சிரஸிலிருந்து எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு ஜாக்ரதையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

42. பிறகு ஸ்நாநாங்க தர்பணம் பண்ண வேண்டும்.

43. பிறகு ஸந்த்யாவந்தநம் பண்ண வேண்டும்.

44. ஸந்த்யா வந்தநம் பண்ணாதவன் எந்த வைதிக கர்மாக்களைப் பண்ணுவதற்கும் யோக்யதை அற்றவன். ஸந்த்யா வந்தநமும் பகவதாராதநம் தான். ஸந்த்யா வந்தநம் பண்ணாமல் பகவானுக்கு ஆராதநம் பண்ணினாலும், அவனை ஸேவித்தாலும், த்யாநம் பண்ணினலும் பகவான் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

45. காலையில் அர்க்ய ப்ரதாநத்தை ஸூர்னைப் பார்த்துப் பண்ணவேண்டும். ஜபத்தையும் கிழக்கு முகமாகப் பார்த்துக் கொண்டு, நின்று கொண்டே பண்ண வேண்டும்.

46. மாலையில் அர்க்யப்ரதாநத்தை மட்டும் மேற்கு முகமாக நின்றுகொண்டு பண்ண வேண்டும். ஜபத்தை மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டு பண்ண வேண்டும்.

47. மாத்யாஹ்நிகத்தை காலை ஸந்த்யாவந்தநம் போல் பண்ண வேண்டும். உபஸ்தாநத்தை மட்டும் மேற்கு முகமாகத் திரும்பிப் பண்ண வேண்டும். அர்க்யப்ரதாநம் ஒன்று அல்லது இரண்டு பண்ண வேண்டும்.

48. ஸந்த்யா வந்தநம் பண்ணிய பிறகு அஷ்டாக்ஷரம், த்வயம், சரமஸ்லோகம் எனப்படும் மூன்று மந்த்ரங்களையும் ஜபிக்க வேண்டும்.

49. பிறகு ஆதார சக்த்யாதி தர்ப்பணங்களைப் பண்ண வேண்டும்.

50. பிறகு வஸ்த்ர நிஷ்பீடநம் பண்ண வேண்டும்.

51. இதற்குப் பிறகு ப்ரஹ்ம யஜ்ஞத்தை விடாமல் கண்டிப்பாகப் பண்ண வேண்டும்.

52. பிறகு பெருமாள் ஸந்நிதிக்குச் சென்று பெருமாளை ஸேவிக்க வேண்டும்.



53. தாயார், தகப்பனார், மற்றுமுள்ள பெரியவர்களை சேவிக்க வேண்டும்.

54. வேதாந்தகாலக்ஷேபாதிகளைப்பண்ணவேண்டும்.

55. பிறகு பெருமாள் திருவாராதநத்திற்கு வேண்டிய புஷ்பம், சந்தநம், துளஸீ ஆகியவற்றை நாமே சேகரிக்க வேண்டும்.

56. ஞாயிற்றுக்கிழமை, செவாய்க்கிழமை, வெள்ளிக் கிழமை, அமாவாஸ்யை, மாதப்பிறப்பு, ஸ்ராத்த தினங்கள், த்வாதசீ முதலானவற்றில் துளஸியைப் பறிக்கக்கூடாது.

57. துளஸியை, 'துளஸ்யம்ருத ஜன்மாஸி...' என்ற மந்த்ரத்தைச் சொல்லிக் கையைக் கூப்பி ப்ரார்த்தித்த பிறகே தளம் தளமாகச் சேகரிக்க வேண்டும்.

58. துளஸீ, புஷ்பம் இவற்றைத் தங்கள் க்ருஹத்திலேயே வளர்த்துப் பெருமாளுக்கு ஸமர்ப்பிப்பது உத்தமம்.

59. புஷ்பத்தை முதல் நாள் இரவே பறித்துவைக்கக் கூடாது.

60. நூலில் கோர்த்த அல்லது ஜிகினா சுற்றிய புஷ்ப மாலைகளை பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கக்கூடாது.

61. வாஸனையுள்ள புஷ்பங்களையே பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கவேண்டும்.

62. பிறகு மாத்யாஹ்நிகத்தைப் பணவேண்டும்.

63. பிறகு பகவதாராதநத்தைப் பண்ணவேண்டும். பெருமாள் இல்லாத வீடு ஸ்மசானத்திற்கு ஸமம். ஆகையால், அகத்தில் ஒரு ஸாளக்ராமமாவது இருக்கவேண்டும்.

64. பெருமாளுக்கு நிவேதநம் பண்ணாமல் அன்னத்தை ஒருபோதும் சாப்பிடக்கூடாது.

65. சாஸ்த்ரத்தில் விலக்கப்பட்ட வெங்காயம், வெள்ளைப்பூண்டு, முருங்கைக்காய், வெண் கத்தரி இவற்றை பகவானுக்கு நிவேதநம் பண்ணக் கூடாது.

66. நாம் சாப்பிடும் வஸ்துக்களை எல்லாம் முன்னதாக பகவானுக்குக் கண்டருளப் பண்ணிய பிறகே சாப்பிட வேண்டும்.

67. திருவாராதநம் பண்ணி முடித்த பிறகு பெருமாள் தீர்த்தம், துளஸீ, புஷ்பம் முதலியவைகளை ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும்.

68. பிறகு அகத்தில் உள்ளவர்களுக்குப் பெருமாள் தீர்த்தம் முதலியவைகளைக் கொடுக்க வேண்டும்.

69. அமாவாஸ்யை தர்பணத்தை பகவதாராதநம் பண்ணிய பிறகே பண்ண வேண்டும்.

70. மாஸப் பிறப்பு தர்பணத்தைச் சில ஸமயம் முன்பும், சில ஸமயம் பின்பும் பண்ணலாம்.

71. மாதா, பிதாக்கள் ச்ராத்த தினத்தன்று அமாவாஸை தர்பணத்தை ச்ராத்தம் பண்ணிய பிறகே பண்ண வேண்டும். மாதப்பிறப்பு தர்பணத்தை முதலில் பண்ணிய பிறகே ச்ராத்தம் பண்ண வேண்டும்.

72. பகவதாராதநம் பண்ணிய பிறகு வைச்வதேவம் (உபதேசமாகியிருந்தால்) பண்ண வேண்டும்.

73. கால்களை அலம்பிக் கொண்டு இரண்டு தடவை கள் ஆசமநம் பண்ணிவிட்டுச் சாப்பிடப் போக வேண்டும்.

74. மணையில் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். உட்காரும் போது கால்கள் பூமியில் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

75. விஜாதீயர்களுடனும், ஆசார ஹீனர்களுடனும் சேர்ந்து சாப்பிடக் கூடாது.

76. ப்ரஸாதம் ஸாதித்ததும், ''எங்களுக்கு நித்யம் இந்த அன்னம் கிடைக்க வேண்டும்'' என்று கையைக் கூப்பி ப்ரார்த்திக்க வேண்டும்.

77. நெய் ஸாதித்த பிறகு பரிஷேசநம் பண்ண வேண்டும்.

78. பரிஷேசநம் பண்ணுவதற்கு முன் அந்தர்யாமிக்குப் ப்ரஸாதத்தை நிவேதநம் பண்ண வேண்டும்.

79. பரிஷேசநம் பண்ணுவதற்கு முன் ப்ரஸாதத்தைத் தொடக்கூடாது. இரண்டு வேளைகளிலும் மந்த்ரத் தைச் சொல்லி பரிஷேசநம் பண்ண வேண்டும். அதாவது, ப்ரஸாதம் உள்ள இலையை ஜலத்தால், மந்த்ரத்தைச் சொல்லிச் சுற்றவேண்டும்.

80. பெருமாள் தீர்த்தம் ஸாதித்த பிறகு ப்ராணாஹுதி பண்ண வேண்டும்.

81. ப்ராணாஹுதி மந்த்ரங்களைச் சொல்லி அன்னத்தைச் சாப்பிடும் போது பல்லால் கடித்துச் சாப்பிடக் கூடாது. நாக்கின் உள்ளே போட்டுத் தனித்தனியாக விழுங்க வேண்டும்.

82. இது அக்னிஹோத்ரத்திற்கு ஸமமானது. அதனால் இதை 'ப்ராணாக்நிஹோத்ரம்' என்பார்கள்.

83. பிறகு 'கோவிந்தாய நம:' என்று கோவிந்த நாமத் தைச் சொல்லிக் கொண்டே சாப்பிட வேண்டும்.

84. உப்புமா, பொங்கல், புளியோதரை, தத்யந்நம் முதலிய உப்புப் போட்ட பதார்த்தங்களை முதலில் ஸாதித்தால் அதற்குப் பரிஷேசநம் கிடையாது.

85. காலை, ராத்ரி இரண்டு வேளைகளில் தான் பரிஷேசநம் பண்ண வேண்டும்.

86. விரல் நுனி பாகத்தால் தான் சாப்பிட வேண்டும். கைப்பக்கவாட்டால் சாப்பிடக் கூடாது.

87. கையில் எடுத்துச் சாப்பிட்ட மிச்சத்தை மறுபடியும் இலையில் போட்டுக் கொண்டு மறுபடி சாப்பிடக் கூடாது.



88. அப்பளம், வத்தல், வடை, லட்டு முதலிய வைகளைக் கையில் எடுத்துக் கடித்துக் கொஞ்சம் சாப்பிட்ட பிறகு இலையில் வைத்துக் கொண்டு மறுபடியும் சாப்பிடக் கூடாது. இவைகளை விண்டு சாப்பிட வேண்டும். அல்லது கடித்துச் சாப்பிட்டால் கீழே வைக்காமல் மொத்தத்தையும் கையில் வைத்துக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடலாம். ஊறுகாயும் இப்படியே.

89. பகவானுக்கு நிவேதநம் பண்ணியவைகளைப் பற்றிக் குறை கூறிக் கொண்டே சாப்பிடக் கூடாது.

90. சாப்பிடும் போது கோப தாபம் கூடாது.

91. பகலில் சாப்பிடும் போது அறை வயிறு தான் சாப்பிட வேண்டும். கால் வயிறு தீர்த்தம் சாப்பிட வேண்டும். கால் வயிறு மூச்சுக் காற்றைத் தராளமாக விடுவதற்காகக் காலியாக இருக்க வேண்டும்.

92. தீர்த்த பாத்ரத்தை வலது பக்கத்தில்தான் வைத்துக் கொள்ள வேண்டும். இடது பக்கத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது.

93. பாயஸம், பக்ஷயம், தயிர் முதலியவை தவிர மற்ற வைகளில் கொஞ்சம் மிச்சம் இலையில் இருக்க வேண்டும். கையை நக்கிச் சாப்பிடக் கூடாது.

94. சாப்பிட்ட பிறகு உத்ராபோசநத்தை – பெருமாள் தீர்த்தத்தை – சாப்பிட வேண்டும்.

95. முதலில் மூன்று தடவை வாயைக் கொப்பளித்து விட்டு, பிறகு கையை நன்கு அலம்பி, மறுபடியும் வாயை ஜலத்தால் கொப்புளித்து நன்கு அலம்ப வேண்டும்.

96. பிறகு கால்களை நன்றாக அலம்பிக்கொண்டு இரண்டு தடவை ஆசமநம் பண்ண வேண்டும். எப்பொழுதும், கால்களை அலம்பிக்கொள்ளும் போது கையில் ஜலத்தை கொட்டிக் கால்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சொம்பு ஜலத்தை நேரிடையாகக் கால்களில் கொட்டிக் கொள்ளக் கூடாது.

97. சந்தநம் பூசிக் கொண்டால் உடனே கையை அலம்பிக் கொள்ள வேண்டும்.

98. வெற்றிலையை முதலில் போட்டுக் கொண்டு தான் பிறகு பாக்கைப் போட்டுக்கொள்ள வேண்டும். முதலில் பாக்கை போட்டுக்கொள்ளக் கூடாது. வெற்றிலை, பாக்கு இரண்டும் சேர்த்தும் போட்டுக்கொள்ளக் கூடாது.

99. விவாஹாதிகளிலோ, சாப்பிட்ட பிறகோ வெற்றிலையும் இரண்டு பாக்கும் ஒருபோதும் கொடுக்கக் கூடாது. ஒன்று அல்லது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாக்கு தரலாம்.

100. ஸாயங்காலம் ஸந்த்யாவந்தநம் பண்ணிவிட்டுப் பெருமாளையும் பெரியோர்களையும் ஸேவித்து விட்டு, ஸஹஸ்ரநாமம் முதலியவைகளைச் சொல்ல வேண்டும். ஸமீபத்தில் கோயில் இருந்தால் பெருமாளைப் போய் ஸேவித்து வரவும். ஒரு போதும் தேவதாந்தர கோயில்களுக்குப் போகக் கூடாது.

101. ஸமீபத்திலுள்ள் கோயில்களில் விசேஷ உத்ஸவாதிகள் நடந்தால் பெருமாளை ஸேவிக்காமல் இருக்கக் கூடாது.

102. கோயில்களில் நடக்கும் பகவத் கதா காலக்ஷேபாதிகளுக்கும் அவகாசமிருந்தால் போய்வர வேண்டும்.

103. ராத்ரி படுத்துக் கொள்ளும் போது,

★ *''க்ஷீரஸாகர தரங்க சீகராஸார தாரகித*
சாரு மூர்த்தயே|
போகிபோக சயநீய சாயிநே மாதவாய
மதுவித்விஷே நம:||''

என்ற ச்லோகத்தைச் சொல்லி 'மாதவாய நம:' என்று சொல்லி மாதவனை த்யாநம் பண்ணி, கிழக்கு அல்லது தெற்குப் பக்கமாகத் தலையை வைத்துக் கொண்டு தூங்கவேண்டும்.

(★திருப்பாற்கடலில் பிராட்டியுடன் திருவனந் தாழ்வானது திருமேனியாகிற திருப்பள்ளியின் மீது சாய்ந்து கண்வளரும் போது அக்கடலில் வீசுகின்ற அலைகளினின்றும் சிறு துளிகள் வந்து திருமேனி யில் முத்து முத்தாகத் தெறித்திருப்பதைப் பார்த்தால் நக்ஷத்ரங்கள் படிந்திருக்கின்றனவோ! என்று எண்ணும்படி அழகாக விளங்குகின்ற திருமேனியை யுடைய திருமாலை வணங்குகின்றேன்.) ❊

மாசியில் முக்கிய உத்ஸவங்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை உத்ஸவம்
பிப்ரவரி 16 (ஞாயிறு)
விசேஷ திருமஞ்சனம், ஸங்கல்ப அர்ச்சனை

ச்ரவண உத்ஸவம்
பிப்ரவரி 22 (சனி)

திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்
மார்ச் 3 (செவ்வாய்)

குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்
மார்ச் 5 (வியாழன்)

தவனோத்ஸவம் (மூன்று நாட்கள்)
மார்ச் 7 (சனி) முதல் 9 (திங்கள்) வரை

மாசி பௌர்ணமி - ஸமுத்ர ஸ்நானம்
மார்ச் 9 (திங்கள்)



With Best Compliments from:

Sevilimedu Raghavan,
Door No. 8, Plot No. 59,
Union Carbide Colony 4th Street,
Ullagaram, Chennai 600091.

&

Mythili Chakrapani,
No. 3, 2nd Street,
Jagadambal Colony,
Chennai 600014.


SVDD thanks Sri Sevilimedu Raghavan & Smt. Mythili Chakrapani,
for sponsoring this month's issue of Desika Sandesam





தை வெள்ளி உத்ஸவம்









வனபோஜன உத்ஸவம்

